DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 68/2023

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.முனியசாமி | Caste: | |
| Father's Name | : முத்து | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

25.05.2026 – 12.20 PM

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் தற்போது உடையார் கூட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அவர் உள்ளூர்காரர். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சுமார் 4,5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்த போது போலிசார் வந்து ஏதோ விசாரணை என்று கூறி கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–

கடந்த 13.05.2022 ம் தேதி மாலை 06.00 மணிக்கு நான் வழக்கு சம்பவ இடத்தில் இருந்த போது பேரையூர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், என்னுடன் மகேந்திரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரித்த போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:44:15 +0530